**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.23/2022**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **03.06.2026** |
| **பெயர்** | **தாஸ்** |
| **த/பெ** | **மாசிலாமணி** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம் – 12.14. பி.எம்.**

**குறுக்கு விசாரணை –**

1. நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். 2 முதல் 4 பிரதிவாதிகள் என்னுடைய தம்பிகள். வழக்கின் வாதிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழிபாட்டை கோரி தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் பள்ளிப்பாயைத்தில் உள்ளது. வழக்கு சொத்து கிராமநத்தம் வீட்டுமனை வகைப்பாடு என்றால் சரிதான். வழக்கில் உள்ள சொத்து விவரத்தில் எ முதல் ஜி வரையிலான அட்டவணைகள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன 7 அட்டவணை சொத்துக்களும் கிராமநத்தம் வீட்டுமனை வகைப்பாடு என்றால் சரிதான். ஒவ்வொரு அட்டவணை சொத்திற்கும் நான்கெல்லை விவரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 7 அட்டவணை சொத்துக்களிலும் பிரதிவாதிகள்

இடையூறு செய்யக்கூடாது என்று வாதிகள் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்று கிரையப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய்யான கிரையப்பத்திரம்.

3. சொத்துக்களை நானும் ஹரிதாஸ் தான் சேர்ந்து வாங்கினோம் 2007–ல் வாதி கிரையம் செய்து கொண்டார். கிரையப்பத்திரம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும். என்னிடம் பண வசதி இல்லாத காரணத்தினால் நான் அதனை பதிவு செய்யவில்லை. 2017–ல் எனது தாத்தாவிற்கு வேறு நிலத்திற்கு பதிவு செய்வதாக கூறி 12 அடி பாட்டையை வாதி எழுதி வாங்கிவிட்டார். 12 அடி வழிப்பாட்டையை காண்பிக்க நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

4. 2017–ல் பொது வழி குறித்து ஏற்பட்ட கிரையப்பத்திரம் செல்லாது என்றும் ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுததுள்ளோமா என்றால் எடுக்கவில்லை அவ்வாறு கிரையப்பத்திரம் உள்ளது என்ற விவரம் எங்களுக்கு தெரியாது இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் தெரியவந்தது. நாங்கள் பயன்படுத்தி வரும் பொதுவழியை வாதிகள் இடையூறு செய்கிறார்கள் என்று நாங்கள் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தை பொறுத்து காவல் நிலையத்தில் புகார் அளித்து அதனை தொடர்ந்து ஆர்.டி.ஒ அலுவலகத்தில் முறையிடுமாறு அதில் வாதி வராமல் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார். அவ்வாறு மேற்சொன்ன காவல் துறையினர் வருவாய் கோட்டாச்சியருக்கு அனுப்பிய மனுவையோ அல்லது நான் வருவாய் கோட்டாச்சியரிடம் அளித்த மனுவினை இந்நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாசில்தாரிடம் அளித்த மனுவினை மட்டும் தாக்கல் செய்துள்ளோம். வருவாய் கோட்டாச்சியர் அந்த புகார் மனுவின் மீது இறுதி உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் நாங்கள் அதற்கு செல்லவில்லை. நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கிராமநத்த நிலங்களுக்கு அவரவர்களின் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். எங்கள் நால்வர் பெயரிலும் ஒரே பட்டா தான் உள்ளது.

5. ஹரிதாஸ் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு அவர் பட்டா வாங்கி கொண்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அப்போது வாதி மட்டும் தான் எங்கள் குடும்பத்தில் படித்தவராக இருந்தார். அதனால் அவர் பட்டா வாங்கிய விவரம் எங்களுக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்களுக்கு வாதி இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 10/2021 பங்கஜம்மாள் மற்றும் சரோஜம்மாள் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதுவும் வழிபாட்டைக்காக தாக்கல் செய்தார். மேற்சொன்ன வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு வழி உட்பட 2007–ல் வாதி கிரையம் பெற்றுவிட்டார் என்றால் வழிபாட்டையை குறித்து வாதியே எழுதி கொண்டார். வாதிக்கு அந்த வழிபாட்டை கிரையத்தின் மூலம் கிடைக்கவில்லை.

6. மேற்சொன்ன வழக்கில் இடைக்கால மனுவில் இரு தரப்பு விசாரணைக்கு பிறகு வழிப்பாட்டையை பொறுத்து வாதிக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவை எதிர்த்து அந்த வழிப்பாட்டையில் இடையூறு செய்துவந்ததால் அந்த வழக்கில் என் தம்பியான பாரி இடையூறு செய்யமாட்டோம் என்று இந்நீதிமன்றத்தில் எழுதி கொடுத்தார் என்றால் அவர் விவரம் தெரியாமல்

எழுதி கொடுத்துவிட்டார். அந்த விரோதத்தின் அடிப்படையில் தான் தொர்ந்து வழக்கு சொத்தில் இடையூறு செய்கிறோம் என்றால் அவ்வாறு எந்த இடையூறும் செய்யவில்லை. வாதி தான் வழிப்பாட்டையில் இடையூறு செய்துவருகிறார். 2007–ல் வாதி வழிப்பாட்டையுடன் பெற்ற கிரையத்தை எதிர்த்து 2020–ல் நாங்கள் பத்திரம் செய்து கொண்டோம் என்றால் நான் சரோஜம்மாளிடம் இருந்து வாங்கிய சொத்தினை தான் கிரையம் செய்து கொண்டேன். நானும் வாதியும் சரோஜம்மாளிடம் இருந்து தான் முதலில் சொத்துக்களை வாங்கினோம்.

7. நாங்கள் கிரையம் பெற்ற பத்திரம் வாதியின் கிரையப்பத்திரத்திற்கு பிறகு எழுதப்பட்டது அதில் வாதிக்கு ஏற்கனவே வழங்கிய வழிப்பாட்டையை மறைத்து கிரையப்பத்திரம் ஏற்படுத்தி இருந்தோம் என்றால் சரியல்ல. நான் கிரையபத்திரம் எழுதிய காலத்தில் வாதியின் பத்திரத்தில் வழிப்பாட்டை குறிப்பிட்டுள்ள விவரம் குறித்து தெரியும் என்றால் தெரியாது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 12.43. p.m.**